# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 14 புதன்கிழமை 30.07.2025 கதிர் 270



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - 
Yarl Muttram
Youtube Channel





## முன்னாள் கடற்படைத் தளபதி தொடர்ந்தும் விளக்கமறியலில்

கொழும்பு, ஜூலை 30

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் (ஓய்வுநிலை) நிஷாந்த உலுகேதென்ன மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொத்துஹெர பகுதியில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பாக அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப பட்டார்.

இந்தநிலையில், இன்று பொல்கஹவெல நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது

# லலித் - குகன் வழக்கில் சாட்சியமளிக்கத் தயார்

### உயர்நீதிமன்றத்துக்குக் கோட்டா அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

2011 ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்ட இரண்டு மனித உரிமை ஆர்வலர்களான லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் தொடர்பாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு தொடர்பான வழக்கில் சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று உயர்நீதிமன்றத்துக்கு அறியப்படுத்தியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பான மேன்முறையீட்டு மனு இன்று உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

7





## கல்முனை வடக்கு உப பிரதேச செயலக வழக்கு 2026 ஜனவரிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 30

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்தக் கோரிய வழக்கு 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்தக் கோரி வழக்குத் தொடர்ந்தார்.

இது குறித்து

7

### நாவற்குழியில் இராணுவத்தின் சுற்றிவளைப்பின் பின்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் வழக்கின் தீர்ப்பு திகதி அறிவிப்பு




யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். நாவற்குழிப் பகுதியில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட 22 இளைஞர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டுள்ளது.

7

## மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் வாய்க்காலினுள் சடலமாக மீட்பு!



திருகோணமலை, ஜூலை 30

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூதூர் சந்தைக்குப் பின்புறமாகவுள்ள வாய்க்காலினுள் ஆண் ஒருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது.

மூதூர், பாலநகரைச் சேர்ந்த 43 வயதுடையரே உயிரிழந்தவர் என அடையாளம்

7

## யாழில் மர்மமான முறையில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 30

மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -



# உலகின் மிக அழகான தீவாக இலங்கை தேர்வு!

கொழும்பு, ஜூலை 30

2025 ஆம் ஆண்டிற்கான 'உலகின் மிக அழகான தீவு' என்று இலங்கை பெயரிடப்பட்டுள்ளது.

உலகளாவிய பயண வலைத்தளமான **'Big 7 Travel'** ஆண்டுதோறும் வெளியிடும் உலகின் மிக அழகான 50 தீவுகள் குறித்த சமீபத்திய அறிக்கையின்படி இது கூறப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டிற்கான 'உலகின் மிக அழகான தீவு' என்ற பட்டியலில் இலங்கைக்கு முதலிடத்தை அந்த வலைத்தளம் பெற்றுத் தந்துள்ளது.

உலகெங்கிலும் உள்ள இடங்களைக் கொண்ட இந்தப் பட்டியல், 2025 ஆம் ஆண்டில் ஆராய வேண்டிய தனித்துவமான தீவு அனுபவங்கள் மற்றும் ஈர்ப்புகளை எடுத்துக்காட்டுகிறது.

இந்த ஆண்டு தரவரிசை புதிய பிரபலமான இடங்கள், தொலைதூர விடுதிகள் மற்றும் பிரபலமான இடங்களின் கலவையை எடுத்துக்காட்டுகிறது.

முந்தைய ஊடக முடிவுகள், **Big 7 Travel** ஆசிரியர் குழுவின் பங்களிப்புகள், சமூக ஊடகங்களில் உலகின் பயண இடங்களின் புகழ் மற்றும் 2025 ஆம் ஆண்டில் பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் இடங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒட்டுமொத்த மதிப்பெண்ணின் அடிப்படையில் இந்தப் பட்டியல் தொகுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பீடிக்கான புகையிலை வரியினை அதிகரிக்க அனுமதி



கொழும்பு, ஜூலை 30

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பீடிக்கும் அறவிடப்படும் புகையிலை வரியை ரூ. 2 இல் இருந்து ரூ. 3 ஆக அதிகரிக்கும் நோக்கில் 2025 ஏப்ரல் 01ஆம் திகதியிடப்பட்ட 2430/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிக்கு அரசாங்க நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியது.

நாடாளுமன்ற உறுப்பினர் (கலாநிதி) ஹர்ஷ த சில்வா தலைமையில் அண்மையில் (22) நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது. இது தொடர்பான திருத்தம் 2025 வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதுடன், 1999ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க புகையிலை வரிச்சட்டத்தின் 2வது பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்ட கட்டளையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.

கடந்த வருடத்தில் பீடி தயாரிப்பிற்காக 1140 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதாகவும், இதில் 840 அனுமதிப் பத்திரங்களே வரி அதிகரிப்பின் பின்னர் புதுப்பிக்கப்பட்டிருப்பதாகவும் மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

இதன் காரணமாக ஈட்டப்பட்ட வருமானமும் குறைந்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. கடந்த வருடத்தில் 2 பில்லியன் ரூபா வருமானம் எதிர்பார்க்கப்பட்ட போதும், 1,055 மில்லியன் ரூபாய் மாத்திரமே வருமானமாக ஈட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வருடத்தில் இதுவரை 469 மில்லியன் ரூபாய் மாத்திரமே வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது. அதிக அளவிலான பீடிகள் நாட்டுக்குள் கடத்திவரப்படுகின்றமை மற்றும் இதற்கு எதிராகப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையே இதற்குக் காரணம் என ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

வரி அதிகரிப்பின் காரணமாக அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படுவது குறைவடைந்திருப்பதுடன், சட்டவிரோத சந்தை அதிகரித்திருக்கின்றதா என குழுவின் உறுப்பினர்கள் கேள்வியேழுப்பினர்.

அதிக வரிகளைப் பரிந்துரைக்கும்போது வணிகங்கள் தலைமைமறைவாகும் என்ற பொருளாதாரக் கொள்கையை மேற்கோள்காட்டிய அவர்கள், பீடிக்கான வரிகளைக் குறைக்கும்போது சட்டரீதியான பீடி உற்பத்தி அதிகரிக்கப்பட்டு அதன் ஊடாக வருமானமும் அதிகரிக்கும் என அவர்கள் தெரிவித்தனர்.

வருவாய் இலக்குகளை அடைவதில் அவற்றின் செயல்திறனை நிரூபிக்க, எதிர்கால வரி சீர்திருத்தங்கள் குறித்த முடிவுகள் பொருத்தமான அறிவியல் சான்றுகளின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்று குழு அறிவுறுத்தியது.

இக்குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, சாணக்கியன் இராசமாணிக்கம், (கலாநிதி) கௌசல்யா ஆரியரத்ன, அர்கம் இலியாஸ் மற்றும் நிமல் பலிஹேன ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)



# செவனகல மற்றும் பெல்வத்த சீனித் தொழிற்சாலைகள் ஆபத்தில்

கொழும்பு, ஜூலை 30

பெல்வத்தை மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலைகள் இரண்டும் நமது நாட்டிற்கு வளங்களாகும். அரசாங்கத்திற்குச் சொந்தமான இரு நிறுவனங்களாகும். இவ்வாறு காணப்பட்ட போதிலும், இந்த இரண்டு நிறுவனங்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து நாட்டிற்கும், அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் பல சந்தர்ப்பங்களில் தெரிவிக்கப்பட்ட போதிலும், இந்த இரண்டு நிறுவனங்களும் நாளுக்கு நாள் வீழ்ச்சியை கண்டு வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

விசேட கூற்றொன்றை முன்வைத்து நேற்று விசேட கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

பெல்வத்த சீனி உற்பத்தி தொழிற்சாலை கடந்த 9 மாதங்களாக நீரு தொகையைச் செலுத்தவில்லை. இவ்வாறு செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ரூ.3240 இலட்சமாகும்.

இதன் காரணமாக, 3 மாதங்களுக்கு ரூ.230 இலட்சம் நீரு மிகை ஊதியத்தைச் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளன. 2024 ஆகஸ்ட் இல் இலங்கை வங்கியிலிருந்து ரூ. 5000 இலட்சம் கடன் பெறப்பட்டுள்ளது. 2024 நவம்பரில் ரூ.10000 இலட்சம் கடன் பெறப்பட்டுள்ளது, அண்மையில் மற்றுமொரு கடனையும் பெற்று சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இத்தருணம் வரை விவசாயிகளுக்கு ரூ. 3000 இலட்சங்களையும், விநியோகஸ்தர்களுக்கு ரூ. 4000 இலட்சங்களையும் செலுத்த வேண்டியுள்ளது. பெல்வத்த நிறுவனத்தில் 3,795 பேர் பணியாற்றுகின்றனர்.



இதன் மூலம் சுமார் 5,700 விவசாயிகள் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். பெல்வத்த சீனி உற்பத்தி தொழிற்சாலையின் நிலை இவ்வாறு தான் காணப்படுகிறது.

செவனகல சீனி உற்பத்தி தொழிற்சாலையின் நிலைமையை நோக்கும் போது ரூ.2050 இலட்சத்தை விவசாயிகளுக்கு செலுத்த வேண்டி காணப்படுகின்றன.

ரூ.150 இலட்சமளவில் நீரு கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லை. விநியோகஸ்தர்களுக்கு ரூ.1000 இலட்சம் செலுத்த வேண்டி காணப்படுகின்றன. ஏயுவு வரியாக ரூ.4000 இலட்சமும் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டி காணப்படுகின்றன.

இங்கு 1300 ஊழியர்கள் காணப்படுகின்றனர். கிட்டத்தட்ட 3900 விவசாயிகள் இந்த செவனகல சீனி உற்பத்தி தொழிற்சாலையின் மூலம் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

அவ்வாறே இலங்கை வங்கிக்கு 2000 இலட்சம் ரூபா கடனையும் இந்த செவனகல சீனி உற்பத்தி தொழிற்சாலை செலுத்த வேண்டி காணப்படுகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இதன் விளைவாக, இந்த இரண்டு நிறுவனங்களும் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. இந்த இரண்டு நிறுவனங்கள் குறித்தும் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பும் போது, கிடைக்கும் பதில் தான் எந்தப் பிரச்சினையும் இல்லை, இந்த நிறுவனங்கள் நன்றாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன என்பதாகும்.

இந்த கட்டத்தில், இந்த இரண்டு நிறுவனங்களின் தற்போதைய நிலை மற்றும் எதிர்காலம் குறித்து பிரச்சினை உருவெடுத்து காணப்படுகின்றன.

வினைதிறனற்ற அரச நிர்வாகத்தின் கீழ் இந்த இரண்டு நிறுவனங்களும் நாளுக்கு நாள் வீழ்ச்சி கண்டு வருகின்றன. இந்தப் பிரச்சினையைப் புறக்கணிக்காமல், பெல்வத்த, செவனகல இந்த இரண்டு நிறுவனங்களையும் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்தையும், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

எடுக்க முடியுமான சரியான தீர்மனத்தை எடுங்கள். இந்த இரண்டு நிறுவனங்களின் பாதுகாப்பிற்காகவும், விவசாயிகள் மற்றும் ஊழியர்களின் நலனுக்காகவும் அவர்களினது உரிமைகளுக்காகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக நானும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியும் தொடர்ச்சியாக முன்நிற்போம்.

இந்த இரு நிறுவனங்களையும் பாதுகாத்தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார். (ஐ)



# 'வெள்ளை யானைகள்' நடமாட்டம்

கொழும்பு, ஜூலை 30

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் பொத்துவில் பானம பகுதியில் வெள்ளை யானைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. குறித்த யானைகளைக் பார்வையிட ஏராளமானோர் அப்பகுதிக்கு வருகை தர ஆரம்பித்துள்ளனர்.

குறித்த யானைகள் பார்ப்பதற்கு வெண்மையாக காட்சியளிப்பது குறித்து பலரும் பல கருத்துக்களை முன்வைத்துள்ளனர். பானமவில் காணப்படும் இந்த யானைகளின் 'வெண்மை' குறித்து பிரதேசவாசிகள் ஒரு சுவாரஸ்யமான விளக்கத்தை அளித்துள்ளனர்.

அப்பகுதியில் காணப்படும் சேறு மற்றும் மணல் இந்த யானைகளின் உடலில் ஒட்டியிருப்பதன் காரணமாகவே அவை வெள்ளையாகக் காட்சியளிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகள் சேற்றில் குளித்து பின்னர் மணலில் புரளும்போது சேறும் மணலும் அவற்றின் தோலில் ஒட்டிக் கொண்டு அவற்றின் இயல்பான நிறத்தை மறைத்து வெண்மையான தோற்றத்தை அளிக்கின்றன. இது ஒரு தற்காலிகமான இயற்கையான நிகழ்வு என்பதைப் பிரதேசவாசிகள் உறுதிப்படுத்துகின்றனர்.

மேலும் பொதுவாக வெள்ளை யானைகள் மரபணு மாற்றத்தால் ஏற்படும் நிறமிக் குறைபாட்டினால் உருவாகும் அரிதான உயிரினங்கள். அவை புனிதமானவை யாகவும் அதிர்ஷ்டத்தின் அடையாளங்களாகவும் பல கலாச்சாரங்களில் மதிக்கப்படுகின்றன.

எனினும் இதன் உண்மை நிலையைப் பொருட்படுத்தாமல் வெள்ளை யானை ஜோடியைக் காணும் ஆர்வம் சுற்றுலாப் பயணிகளிடையே அதிகரித்துள்ளது. இயற்கையின் இந்த விசித்திரமான காட்சியை நேரடியாகக் காணும் அனுபவத்தைப் பெறுவதற்காக உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பலர் பானமப் பகுதிக்கு படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

இயல்பாகவே யானைகள் அதிகம் காணப்படும் இலங்கையில் இதுபோன்ற ஒரு தனித்துவமான தோற்றம் கொண்ட யானைகள் இயற்கையின் ஆச்சரியமான அம்சங்களை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தியுள்ளன. (ஐ)

# நுவரெலியாவில் பெண்கள் காப்பகம் திறப்பு

கொழும்பு, ஜூலை 30

நுவரெலியா தற்காலிக பெண்கள் காப்பகத்தை மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சர் திறந்து வைத்தார்.



புதிய அரசாங்கம் அமைக்க பட்டதில் இருந்து குறுகிய காலத்திற்குள் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுக்கு சாதகமான பணிகளை மேற்கொண்டு வருகிறது என்று மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சர் சரோஜா சாவித்திரி பால் ராஜ் கூறினார்.

செவ்வாய்க்கிழமை (29) அன்று நுவரெலியா தற்காலிக பெண்கள் காப்பகத்தை திறந்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.


வீட்டு வன்முறையை எதிர்த்து போராடவும், குழந்தைகள் மற்றும் பெண்கள் பாதுகாப்பிற்கு தேவையான மசோதாக்களைக் கொண்டுவரவும், அனாதைகள் மற்றும் நன்னடத்தையில் உள்ள குழந்தைகளுக்கு ரூ. 5,000 உதவித்தொகை வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட, குறுகிய காலத்திற்கு வீடுகளை விட்டு வெளியேறி, அரசின் பாதுகாப்பு மற்றும் சமூகமயமாக்கலுடன் தங்கியிருக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகளை தற்காலிக பெண்கள் தங்குமிடங்கள் மூலம் தங்க வைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது 10 தங்குமிடங்கள் இருப்பதாகவும், இன்று நுவரெலியாவில் திறக்கப்பட்ட பெண்கள் தங்குமிடத்துடன், இது 11 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பானிய தூதர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுஷ்கா சஜீவானி மற்றும் கலை செல்வி, பொது பிரதிநிதிகள், பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சின் செயலாளர் கே.டி.ஆர். ஓல்கா, நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னகோன், இலங்கை மகளிர் பணியகத்தின் இயக்குனர் சஜீவானி பெரேரா, அரசு அதிகாரிகள் மற்றும் இலங்கையில் உள்ள ருதேீயு பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# 100 அடி பள்ளத்தில் பாய்ந்த முச்சக்கர வண்டி - நால்வர் படுகாயம்



கொழும்பு, ஜூலை 30

லிந்துலை, மெராயா ஊவகெல்லே தோட்டத்தின் மேல் பிரிவில், அதிவேகமாக பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி 100 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் முச்சக்கர வண்டியின் சாரதி மற்றும் பின் இருக்கையில் பயணித்த மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்து நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் முதுகுத் தண்டுவடத்தில் காயம் அடைந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

முச்சக்கர வண்டி சாரதி மற்றும் பின்னால் பயணித்த அவரது நண்பர்கள் அதிக அளவில் மதுபோதையில் இருந்ததாகவும், வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் முச்சக்கர வண்டி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாகவும் தெரியவந்துள்ளது. (ஐ)

# மசோதாக்கள் மீது முடிவெடுக்க காலவரம்பு நிர்ணயித்த விவகாரத்தில் குடியரசுத் தலைவர் எழுப்பிய 14 கேள்விகள் ஆக.19ம் திகதி முதல் விசாரணை நடத்தப்படும்



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசுக்கும் மாநில ஆளுநர் ஆர்.என்.ரவிக்கும் தொடர்ந்து அனைத்து விவகாரத்திலும் மோதல் போக்கு நீடித்து வருகிறது. இந்த நிலையில் சட்டப்பேரவை மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காத விவகாரம், மற்றும் துணைவேந்தர் நியமனம் ஆகியவை தொடர்பான விவகாரத்தில் ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த மூன்று வழக்குகளை விசாரித்த உச்ச நீதிமன்றம், ஆளுநர் கிடப்பில் போட்டு வைத்தும்,

குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தும் இருந்த பத்து மசோதாக்களுக்கு சட்டப்பிரிவு 142ஐ பயன்படுத்தி கடந்த ஏப்ரல் மாதம் 8ம் தேதி ஒப்புதல் வழங்கியும், அதேப்போன்று மாநில அரசால் அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களுக்கு குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர் மூன்று மாதங்களில் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்திருந்தது.

இந்த நிலையில் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய்க்கு, சுமார் 14 கேள்விகளுக்கு விளக்கம் கேட்டு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவருக்கான அதிகாரமான 143ஐ பயன்படுத்தி கடிதம் எழுதி அனுப்பி இருந்தார். இதைத்தொடர்ந்து மேற்கண்ட வழக்கில் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநில அரசுகள் தங்களது தரப்பு விளக்க மனுக்களை நேற்று முன்தினம் தாக்கல் செய்திருந்தது.

அதில்," குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர் மூன்று மாதங்களில் மசோதாவுக்கு ஒப்புதல் வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் வழங்கிய காலக்கெடு என்பது சரியான ஒன்று என்பதால், குடியரசு தலைவர் 14 கேள்விகளுக்கு விளக்கம் கேட்ட கடிதத்தை அவருக்கு மீண்டும் உச்ச நீதிமன்றம் திருப்பி அனுப்பி வைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் மேற்கண்ட விவகாரம் தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி பி ஆர் கவாய் மற்றும் நீதிபதிகள் சூரியகாந்த் ,விக்ரம் நாத் ,நரசிம்மா மற்றும் ஏ.எஸ். சந்துருகர் ஆகியோர் அடங்கிய ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய்," இந்த விவகாரத்தில் ஒவ்வொரு தரப்பும் வாதம் செய்யும் அந்த கால வரம்பை நிர்ணயம் செய்து வழக்கின் விசாரணையை தொடங்க வேண்டும் என்றார்.அப்போது தமிழ்நாடு அரசு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், குடியரசுத் தலைவர் எழுப்பிய 14 கேள்விகள் கொண்ட கடிதத்தை திருப்பி அனுப்பி வைக்க வேண்டும் என்று நாங்கள் தாக்கல் செய்துள்ள விளக்க மனுவில் தெரிவித்துள்ளோம்.

அதுகுறித்து விரிவாக வாதங்களை முன்வைக்க எங்களுக்கு கூடுதலாக நேரம் ஒதுக்க வேண்டும் என்று தெரிவித்தார். கேரளா அரசு தரப்பிலும் இதே கோரிக்கை முன் வைக்கப்பட்டது. இதையடுத்து தலைமை நீதிபதி பிறப்பித்த உத்தரவில்," இந்த விவகாரத்தில் வரும் ஆகஸ்ட் 12ம் தேதிக்குள் அனைத்து தரப்பும் தங்களது எழுத்துப்பூர்வ வாதத்தின் சுருக்கத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். இதையடுத்து வழக்கின் மீதான விரிவான விசாரணை ஆகஸ்ட் 19ம் தேதி முதல் தொடங்கும்.

நோடல்வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்களிடையே நேர அட்டவணையை ஒழுங்கமைக்க வேண்டும். அது கண்டிப்பாகப் பின்பற்றப்படும். மேலும் வழக்கறிஞர்கள் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் தங்கள் வாதங்களை முடிக்க வேண்டும். ஆரம்பத்தில் ஒரு மணி நேரம் ஆட்சேபனை தெரிவிக்கும் கருத்துக்களை விசாரிப்போம். அதன் பிறகு, ஆகஸ்ட் 19, 20, 21, 26 ஆகிய தேதிகளில் அட்டர்னி ஜெனரல் மற்றும் ஒன்றிய அரசு தரப்பு வாதங்களை விசாரிப்போம். இந்த பரிந்துரையை எதிர்ப்பவர்கள் தரப்பு வாதங்கள் ஆகஸ்ட் 28 மற்றும் செப்டம்பர் 2, 3 மற்றும் 9 ஆகிய தேதிகளில் கேட்கப்படும்.

இதைத்தொடர்ந்து செப்டம்பர் 10ம் தேதி இந்த விவகாரம் தொடர்பாக ஒன்றிய அரசு தனது விரிவான பதிலை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். அதில் ஏதேனும் மறுப்பு இருந்தால் அன்றைய தினம் அதாவது செப்டம்பர் 10ம் தேதியே அதுகுறித்து விசாரிக்கப்படும். அதன் பின்னர் வாதங்கள் அனைத்தையும் ஆய்வு செய்து உத்தரவு பிறப்பிக்கப்படும். இதில் கொடுக்கப்பட்ட காலக்கெடுவை கவனமாக அனைத்து தரப்பும் பின்பற்ற வேண்டும் என்று உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார். (ஐ)



## நாளை தலைமைச் செயலகம் செல்லும் முதல்வர் ஸ்டாலின்

தலைமைச் செயலகத்தில் நாளை காலை நடக்கும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார். மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய முதலமைச்சர் நாளை வழக்கமான பணிகளை மேற்கொள்ள உள்ளார். பல்வேறு துறைகளின் முடிவுற்ற திட்டங்களை முதலமைச்சர் நாளை திறந்து வைக்கிறார். (ஐ)



## அமலாக்கத்துறை அலுவலகத்தில் பிரகாஷ் ராஜ் ஆஜர்

சூதாட்ட செயலி வழக்கில் ஐதராபாத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் நடிகர் பிரகாஷ் ராஜ் ஆஜர் ஆனார். இன்று ஆஜராக சம்மன் அனுப்பப்பட்ட நிலையில் பிரகாஷ் ராஜ் நேரில் ஆஜரானார். சூதாட்ட செயலிகளின் விளம்பர தூதுவர்களாக இருக்கும் நடிகர், நடிகைகளுக்கு அமலாக்கத்துறை சம்மன் விஜய் தேவரகொண்டா, ராணா டகுபதி உள்ளிட்டோருக்கும் சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. (ஐ)



## ஊரக பகுதிகளில் ரூ.500 கோடியில் 100 உயர்மட்ட பாலங்கள் கட்ட டெண்டர் கோரியது தமிழ்நாடு அரசு

ஊரக பகுதிகளில் ரூ.500 கோடியில் 100 உயர்மட்ட பாலங்கள் கட்ட தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது. அதன்படி 28 மாவட்டங்களில் 100 உயர்மட்ட பாலங்கள் கட்ட தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியது. அரியலூர், செங்கல்பட்டு, கோவை, கடலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், திருச்சி, திருப்பத்தூர்,

திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், விருதுநகர் ஆகிய 28 மாவட்டங்களில் 100 உயர்மட்ட பாலங்கள் கட்ட டெண்டர் கோரப்பட்டுள்ளது. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் சட்டப்பேரவை உறுப்பினர்கள் அளித்த கோரிக்கைகளின்படி பரிசீலனை செய்து முன்னுரிமை அடிப்படையில் இந்த 100 பாலங்கள் காட்டும் பணியினை தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சித்துறை விரைவில் தொடங்கும் விதமாக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

## காசா மீதான தாக்குதல் மோடியின் மவுனம் வெட்கக்கேடானது: சோனியா சாடல்

காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சித் தலைவர் சோனியா காந்தி இந்தி நாளிதழான டைனிக் ஜாக்ரானில் எழுதியுள்ள கட்டுரையில், காசாவின் மக்களுக்கு எதிராக இஸ்ரேல் அரசின் எதிர்வினை மற்றும் பழிவாங்கல்கள் மிகவும் மோசமானவை மட்டுமல்ல முற்றிலும் குற்றமானது என்பதை ஒப்புக்கொள்வது நமது பொறுப்பு. காசாவில் இஸ்ரேல் ராணுவத்தின் நடவடிக்கையானது இனப்படுகொலைக்கு சமம். மனிதகுலத்திற்கு எதிரான இந்த அவமானத்திற்கு எதிராக பிரதமர் மோடி அரசானது ஊமை பார்வையாளராக இருக்கிறது. இது நமது அரசியலமைப்பு மதிப்புக்களுக்கு ஒரு கோழைத்தனமான துரோகம். காசா மக்கள் மீதான இடைவிடாத மற்றும் பேரழிவு தம் தாக்குதலுக்கு பிரதமர் மோடியின் மவுனம் வெட்கக்கேடானது. இது ஆழ்ந்த ஏமாற்றத்தை அளிக்கின்றது. இது தார்மீக கோழைத்தனத்தின் உச்சமாகும். இந்தியா நீண்டகாலமாக பிரதிநிதித்துவப்படுத்தி வரும் மரபின் சார்பாக தெளிவாக, தைரியமாக மற்றும் வெளிப்படையாக பிரதமர் பேச வேண்டும்" என்று வலியுறுத்தி இருக்கிறார். (ஐ)





# மழலை மனங்கவர!

அதிகமாக செல்லம் கொடுக்கப்படும் குழந்தைகள் அடம்பிடிப்பார்கள். அது மட்டுமல்ல, அன்பும், அக்கறையுமின்றி ஒரு பாதுகாப்பு உணர்வு (Sense of Security) கிடைக்க பெறாமல் வளர்ந்த குழந்தைகளும் தன்னிச்சையாக இருப்பார்கள். யார் சொல்வதையும் கேட்டு மதிப்பு கொடுத்து நடந்து கொள்ள மாட்டார்கள்.

குழந்தைகள் வளரும் போது பிடிவாதமாக தனக்கு வேண்டிய திண்பண்டம், பொம்மை போன்றவற்றை பெற அடம்பிடிப்பது இயல்பான பழக்கம்தான். குழந்தை வளர வளர இந்த வகை பிடிவாத குணம் குறையும். வளர்ந்து வரும் குழந்தை தனக்கு பிடித்ததை கேட்டு அடம் பிடித்து அழுவது இயற்கை தான். ஆனால் அதுவே எல்லை மீறும் போது பெற்றோர்கள் சிந்தித்து செயற்.பட வேண்டும்.

ஒரு வயதிற்கு பிறகு குழந்தையிடம் பிடிவாத குணம் தோன்ற ஆரம்பிக்கும். 18 -24 மாதங்களில் அதிகரித்து தானாகவே ஒழுக்கமான நடவடிக்கைகள் கூடியவரை ஏற்பட்டு விடும். இந்தப் பருவத்தில் பெற்றோர் குழந்தையைக் கவனமாக கையாள வேண்டும். பிடிவாதம் பிடிக்கும் குழந்தையை அடிக்கத் தொடங்கினால், குழந்தை தனக்கு பிடிக்கவில்லையானால் அடிக்கலாம் என்று புரிந்துகொள்ளும்.

பிடிவாத குணம் முளையிலே கிள்ளிவிட வேண்டிய நச்சுமரம்! இதை வளர விட்டால் குழந்தையும் எதிர்காலம் வீணாகும்.

ஓரளவு வளர்ந்த பிறகும் குழந்தை அதிகமாக அடிக்கடி பிடிவாதம் பிடிப்பதற்கு பல காரணங்கள் உண்டு:

- நோய்கள்
- உயிரியல் ரீதியானவை
- சமூக ரீதியானவை
- சுற்றுச்சூழல் ரீதியானவை

1. நோய்க் காரணங்கள்

சில மனநல பிரச்சினைகளால் குழந்தைகளும், வளர் இளம் பருவத்தினரும் அதிகமாக அடம் பிடிக்கின்றனர்.

கவனக்குறைவு மற்றும் அதிக இயக்கம் என்ற குறைபாடு(ADHD)

ஆட்டிசம் (Autism)

மன வளர்ச்சி குன்றியவர்கள

மனத் தொய்வு (Depression)

மனப் பதற்றம் (Anxiety)

2. உயிரியல் காரணங்கள்

- மரபு ரீதியானவை: பெற்றோர், அவர்களின் பெற்றோர்கள், உடன்பிறந்தவர்கள் யாராவது அதிகமாக பிடிவாத குணம் கொண்டவர்களாக, அடம் பிடிப்பவர்களாக இருந்தால் குழந்தையும் அதே இயல்பை மரபு வழியாகக் கொண்டிருக்கும்.
- கருவில் சிசுவிற்கு நச்சுப் பொருள்களின் தாக்கம்.
- கருவுற்ற தாய்க்கு புகைபிடித்தல், மது அருந்துதல், புகையிலை பொருட்கள் பயன்படுத்துவது போன்ற பழக்கங்கள் இருந்தால், அவை பிறக்கும் குழந்தையின் நடத்தைகளை பாதிக்கும்.

3. சுற்றுச்சூழல் காரணங்கள்

காற்று மாசு மற்றும் நீர் மாசு குழந்தைகளுக்கு நடத்தை பாதிப்புகளை ஏற்படுத்தும்.

4. ஊட்டச்சத்துக்கள் குறைபாடு

குழந்தைக்கு இரும்பு சத்து, தயமின் (விற்றமின் டீ1), டிரிப்டோபேன், அமினோ அமிலம் போன்ற நுண்ணூட்ட சத்துக்களின் குறைபாடுகள் இருந்தால், குழந்தை அடம் பிடிக்கும்.

5.சமூக காரணங்கள்

- வறுமை, வேலையின்மை, குடும்பங்களை உதாசீனப்படுத்துதல்
- குழந்தையை உதாசீனப்படுத்துவது, தாக்குவது போன்றவை(Child Abuse)

6.குடும்ப சூழ்நிலை காரணங்கள்

- இரு பெற்றோரும் வேலைக்குச்செல்பவர்களாக இருந்து, குழந்தையை கவனிக்க அவர்களுக்கு நேரமே இல்லாமல் போனால்
- ஒரு பெற்றோர் மட்டும் இருப்பது பிடிவாதத்தை அதிகரிக்கலாம்
- குழந்தைகளை அதிகமாக திட்டி, அடித்து வளர்க்கும் பெற்றோர்
- குழந்தைகளிடம் எல்லாவற்றுக்கும் பணியும் பெற்றோர்
- உடன் பிறந்தவர்களை போட்டியாக விரோதமாக நினைப்பது (ளுடைடவைெ சுஎையடசல)
- குழந்தையுடன் பெற்றோர் அதிக நேரம் செலவிடாத நிலை.

இவற்றில் மாற்றக்கூடிய காரணங்கள் இருந்தால்



மாற்றலாம். இயற்கையான விலை குறைந்த ஊட்டச்சத்துக்களை தரலாம். தேவையானால் மருத்துவரை அணுகலாம்.

திடீரென்று அதிகப் பிடிவாதத்திற்கான சில காரணங்கள்

அடுத்த குழந்தை பிறப்பு

வீட்டில் ஒரு புதிய நபர் வந்து வாழ ஆரம்பிப்பது

வீட்டில் ஏதாவது துயர சம்பவம்

வீட்டை மாற்றுவது

வீட்டு உதவியாளர்களை மாற்றுவது

பள்ளியை மாற்றுவது

நண்பர்களைப் பிரிவது

குழந்தைகள் பிடிவாதத்தை எப்படி எல்லாம் வெளிப்படுத்தலாம்?

பெரிய குரல் எடுத்து அழுவது

சமாதானம் ஆகாமல் ரொம்ப நேரம் அழுவது,

பொருள்களை விட்டெறிவது, துணிமணிகளை விட்டெறிவது, துணிகளை கிழிப்பது

பேசத் தெரிந்தால் திட்டுவது, பெரிய குரலில் தகாத வார்த்தைகள் சொல்வது

பக்கத்தில் இருப்பவர்களை அல்லது ஓடி வந்து பெற்றோரை அடிப்பது, கடிப்பது, கிள்ளுவது

பொருட்களால் அடிப்பது, கீறி விடுவது

இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு அழுவது, கத்துவது (உ-ம்) தரையில் - குளியலறையில்,

கடைகளில், தெருக்களில் விற்கும் பொருட்களைக் கேட்டு அங்கேயே பெரிதாக அழுவது, திட்டுவது, கீழே விழுந்து புரண்டு அழுவது,

யாரையும் கிட்டே நெருங்க விடாமல் தடுப்பது,

வீட்டில் உள்ள அல்லது பெரிய குழந்தையின் புத்தகங்களை, பேப்பரை, கிழிப்பது அவற்றில் கிறுக்குவது

இதெல்லாம் நிறைய பெற்றோர்கள் சிரமத்துடன் அனுபவித்து இருப்பார்கள்.

### எப்படி சமாளிப்பது?

சில செய்திகளை மனதில் நிச்சயப்படுத்திக் கொண்டு செயலில் இறங்க வேண்டும்.

எல்லா அடத்துக்கும் நாம் பணியவும் கூடாது. அதே சமயம் மொத்தமாக மறுப்பும் தெரிவிக்கக் கூடாது. குழந்தையை திசை திருப்புவது எளிது.

ஒரு புதிய பொருளை பார்த்தால், குழந்தை பழைய பொருளை, தான் பிடிவாதம் பிடித்த பொருளை மிக எளிதில் மறந்துவிடும்.

ஆர்ப்பாட்டமும் அலப்பறையும் தாங்கவில்லை என்று அல்லது கடைகளில் அவமானமாகிவிடும் என்று நினைத்து கேட்பதை வாங்கி கொடுத்தால் அது அவனுக்கு வெற்றி. மீண்டும் மீண்டும் இதே பிடிவாதம் தொடரும்.

மிகவும் பொறுமையாக இருக்க வேண்டும். நம் கோபத்தை நாம் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

குழந்தை கத்தி அழும் போது, நாமும் பெரிய குரலில் திட்டுவதோ அறிவுரை தருவதோ கூடாது.

சமயோசிதமாக பேசி அந்த சூழ்நிலையில் இருந்து குழந்தையை வெளியே கொண்டு வர வேண்டும்.

### சில உதாரணங்கள்

குழந்தைகள் கேட்பதையெல்லாம் செய்வதைப் பெற்றோர்கள் நிறுத்தவேண்டும். இதைத் தொடர்ந்து செய்தால் நாம் என்ன கேட்டாலும் கிடைக்கும் என்று குழந்தைகள் நினைத்துக்கொள்வார்கள், அதையே நம்பத் தொடங்கிவிடுவார்கள். வளர்ந்தபின்னரும் இதே எண்ணம் தொடரும். கேட்டதையெல்லாம் நாம் தரலாம், ஆனால் சமூகம் தராது, இல்லையா? இவ்வளவு ஏன், குழந்தையின் வகுப்பில் இருக்கும் பிற மாணவ மாணவியர்கூட அவனதுஃஅவளது எதிர்பார்ப்புக்கு ஏற்றபடி நடந்துகொள்ள மாட்டார்கள். இது குழந்தைக்குப் பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தும்.

கடையில் அல்லது வீதியில் அழும் குழந்தை ஒரு விலை உயர்ந்த தேவையில்லாத பொம்மைக்காக அடம் பிடிக்கிறது என்றால், விலை குறைந்த ஆனால் குழந்தைக்கு உபயோகமான அழகான பொருளை வாங்கித் தரலாம்.

பள்ளிக்கூடப் பை கேட்டு அழும் குழந்தைக்கு அழகான அவனுக்கு பிடித்த விலங்குகள் படம் போட்ட வரையும் புத்தகம் வாங்கி தரலாம். அதற்கு அவனிடம் நைச்சியமாக பேச வேண்டும். சிறிது நேரம் முயன்றும் முடியவில்லை என்றால் அவனிடம் சமாதானம் பேசவோ, கெஞ்சவோ, கொஞ்சவோ கூடாது. நாமும் அழ ஆரம்பிக்கக் கூடாது. 'சரி நீ மெதுவாக வா! நாங்க கிளம்பிகிறோம்' என்று மெதுவாக வெளியேற ஆரம்பிக்க வேண்டும். எதுவும் நடக்காது என்ற உணர்வுடன், துணை இல்லை என்ற பயத்தில் எழுந்து பின்னால் வரும். இது சிறிது நேரம் ஒதுக்கி வைத்தல் (வுைஅந ழுரவ) அல்லது தனியாக வைத்தல் முறைதான். ஆனால் இதை கடைசி ஆயுதமாகத்தான் பயன்படுத்த வேண்டும்.

சோக்லேட் எடுத்து தரச் சொல்லி கிச்சனில் அலறும் குழந்தையை, 'வாசலில் புது குருவி வந்து இருக்கிறது பார்' என்று கூறி வெளியே வந்து காட்டினால், அந்தப் புது ஆசையில் ) பேய் அலறலும் நின்று விடும்.

ஒன்றுக்கு மாற்றாக மற்றொன்று என்பதை லஞ்சம் போல் மாற்றி விடக் கூடாது. குடும்பத்தினர் அனைவரும் ஒரே மாதிரி செயற்பட வேண்டும். அப்பா சோக்லேட் தர மாட்டேன் என்று சொல்ல, குழந்தை அலற, பாட்டி எடுத்து கொடுத்து விட்டால் அது தவறு. குழந்தையின் நடவடிக்கைகளுக்கு சில கட்டுப்பாடுகள், எல்லைகள் வகுத்துக் கொள்ள வேண்டும். எல்லோரும் அதையே பின்பற்ற வேண்டும். சாப்பிடும் நேரம் தொலைக்காட்சி, தொலைபேசி கிடையாது என்றால் எல்லோருக்கும் அப்படியே. குழந்தை கேட்கும் சிலவற்றுக்கு மாற்றாக சிலவற்றை கூறலாம். இன்று சரியான நேரத்தில் வீட்டுப்பாடங்களை முடித்தால் அருகில் இருக்கும் பூங்காவில் சறுக்கி விளையாடலாம். ஒவ்வொரு நல்ல நடத்தைக்கும் ஒரு டோக்கன் அல்லது ஸ்டார் தருவது,

(7ஆம் பக்கம் பார்க்க...)

# இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா 20% முதல் 25% வரை வரி விதிக்க வாய்ப்புள்ளதாக தகவல்





இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா, 20 முதல் 25 சதவீதம் வரை வரி விதிக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏப்ரல் 9ம் தேதி அமலுக்கு வரவிருந்த அமெரிக்காவின் பரஸ்பர வரியை, அமெரிக்க அதிபர் டிரம்ப், ஒப்பந்தம் பேசலாம் என்று 90 நாள்களுக்கு ஒத்தி வைத்திருந்தார். இந்தப் பரஸ்பர வரி வரும் ஆகஸ்ட் 1ம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளது. இந்தக் காலக்கெடுவைப் பயன்படுத்தி, சில நாடுகள் அமெரிக்கா உடன் ஒப்பந்தம் போட்டு, தங்களுடைய நாட்டிற்கான வரி விகிதத்தை குறைத்துள்ளது. ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்கு வராத நாடுகளுக்கு டிரம்பே கடிதம் எழுதி வருகிறார்.

இந்தியா இப்போது வரை அப்படி எந்த ஒப்பந்தமும் அமெரிக்கா உடன் போடவில்லை. அதற்கான பேச்சுவார்த்தை மட்டும் நடந்து வருகிறது. இதை இந்திய அரசு தரப்பும் உறுதி செய்துள்ளது. டிரம்பும் பல முறை இந்தப் பேச்சுவார்த்தை குறித்து தெரிவித்துவிட்டார். ஆனால், ஆகஸ்ட் 1ம் தேதி வர, இன்னும் ஒரு நாளே உள்ளது. இந்நிலையில் டிரம்ப், நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பு கூறியதாவது இந்தியா நமக்கு நல்ல நண்பன். ஆனால், பிற நாடுகளை விட இந்தியா நம் மீது அதிக வரிகளை விதித்து வருகிறது.

இப்போது நான் பொறுப்பில் இருக்கிறேன். அதனால், அது இனி நடக்காது. வர்த்தக ஒப்பந்தங்கள் நன்கு வேலை செய்கிறது என்று நினைக்கிறேன். பிற நாடுகளுக்கும் நன்கு வேலை செய்யலாம். முக்கியமாக, இது அமெரிக்காவிற்கு நன்கு வேலை செய்கிறது என்று கூறியுள்ளார். இந்தியா மீது 20 - 25% வரி விதிக்கப்படுமா? என்ற கேள்விக்கு, அப்படி தான் நினைக்கிறேன் என்று டிரம்ப் பதில் அளித்துள்ளார். ஏப்ரல் 2ம் தேதி முதன்முதலாக பரஸ்பர வரி அறிவிக்கப்பட்ட போது, இந்தியா மீது 26% வரி விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ)


# நியூயார்க் நகரை உலுக்கிய துப்பாக்கிச்சூடு போலீஸ் அதிகாரி உட்பட 5 பேர் பரிதாப பலி: தாக்குதல் நடத்திய நபர் தற்கொலை



நியூயார்க் நகரில் போலீஸ் அதிகாரி உட்பட 5 பேர் துப்பாக்கி சூட்டில் பலியாகினர். தாக்குதல் நடத்திய நபர் தற்கொலை செய்து கொண்டார். அமெரிக்காவின் நியூயார்க் நகரின் மிட்டவுன் மன்ஹாட்டன் பகுதியில் அமைந்துள்ள பார்க் அவென்யூவில் என்.எஃப்.எல் மற்றும் பிளாக்ஸ்டோன் போன்ற முக்கிய நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அங்குள்ள பெரிய கார்ப்பரேட் அலுவலகக் கட்டிடத்திற்கு அருகே நீளமான துப்பாக்கியுடன் வந்த மர்ம நபர் ஒருவர், திடீரென கண்மூடித்தனமாகச் சுடத் தொடங்கினார்.

இதில், அப்பகுதியில் நின்றிருந்த போலீஸ் அதிகாரி உட்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். பின்னர் அந்த நபர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டார். குண்டு துளைக்காத ஆடைகள் அணிந்த நூற்றுக்கணக்கான போலீசார், வெடிகுண்டு நிபுணர்கள், ட்ரோன் பிரிவினர் சம்பவ இடத்தில் குவிக்கப்பட்டனர். அலுவலகம் முடியும் பரபரப்பான நேரத்தில், துப்பாக்கி ஏந்திய போலீசார் அப்பகுதியை முழுமையாகத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், இந்தத் துப்பாக்கிச்சூட்டிற்கான நோக்கம் என்ன என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் காவல்துறை தெரிவித்துள்ளது.(ஐ)

# ரஷ்யாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் காரணமாக ஹவாய் தீவை சுனாமி தாக்கியதால் துறைமுகம் மூடல்



ரஷ்யாவின் கம்சத்கா தீபகற்ப பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 8.7 ஆக பதிவாகியுள்ளது. இதனை தொடர்ந்து ரஷ்யா, ஜப்பான், அலாஸ்கா, ஹவாயை சுனாமி தாக்கியது. தொடர்ந்து சீனா, ஜப்பான், அமெரிக்கா, பிலிப்பைன்ஸ், ஹவாய், சிலி, ஈகுவாடர், பெரு, பிரெஞ்சு பாலினேசியா, குவாம், கோஸ்டாரிக்கா உள்ளிட்ட 16 நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஹவாய் தீவில் சுனாமி தாக்கியதால் துறைமுகம் மூடப்பட்டது. சுனாமி தாக்கியதை அடுத்து ஹவாய் தீவில் விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. ஹவாய் தீவை தொடர்ந்ட்ஹு அலாஸ்கா தீவிலும் சுனாமி தாக்கியுள்ளது. ரஷ்யாவில் நிலநடுக்கம், சுனாமியால் மின் நிலையங்கள் சேதமடைந்துள்ளது. சுனாமி எச்சரிக்கையை அடுத்து ஜப்பானில் 19 லட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ஐ)



# நள்ளிரவில் திடீர் தாக்குதல் தாய்லாந்து கம்போடியா போர் நிறுத்தம் மீறல்

தாய்லாந்து-கம்போடியா இடையே எல்லைப்பிரச்னை காரணமாக மோதல் வெடித்தது. இரு நாடுகளும் ஒருவர் மீது ஒருவர் கடுமையான தாக்குதலை முன்னெடுத்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில் அமெரிக்காவின் அழுத்தம் மற்றும் மலேசியாவில் நடந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இரு நாடுகளும் போர்நிறுத்தத்துக்கு நேற்று முன்தினம் ஒப்புக்கொண்டன. நள்ளிரவில் போர் நிறுத்தம் அமலுக்கு வர இருந்த நிலையில், கம்போடியா பல்வேறு பகுதிகளில் தாக்குதல் நடத்தியதாக தாய்லாந்து ராணுவம் குற்றம்சாட்டியுள்ளது. ஆனால் எந்த இடத்திலும் தாக்குதல் நடத்தப்படவில்லை என்று கம்போடியா தெரிவித்துள்ளது. இரு நாட்டுக்கும் இடையிலான எல்லையில் சண்டை தொடர்கிறதா என்பது தெளிவாக தெரியவில்லை. ஆனால் பல இடங்களில் அமைதி திரும்புவதற்கான அறிகுறிகள் திரும்பின. போர் காரணமாக இடம்பெயர்ந்த பலர் தங்களது வீடுகளுக்கு திரும்பினார்கள். (ஐ)

## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த 1996ஆம் ஆண்டு நாவற்குழிப் பகுதியில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட 22 இளைஞர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனு யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த வழக்கானது தீர்ப்புக்காக இன்று திகதியிடப்பட்டிருந்தது.

சம்பவம் நடைபெற்ற பகுதியானது சாவகச்சேரி நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் உட்படுவதால் அந்த வழக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்தன.

இருப்பினும் நீதிவான் இன்று விடுமுறையில் இருந்த காரணத்தால் வருகின்ற ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி குறித்த வழக்கு தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டுள்ளது.

## யாழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்படி இளைஞர், அருகில் உள்ள ஆலயத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியில் கலந்துவிட்டு வீடு திரும்பும்போது வீட்டுக்கு முன்னால் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

இளைஞர் இவ்வாறான நிலையில் காணப்படுவதைப் பார்த்த உறவினர்கள் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்த போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வச்சந்திரன் மிமோஜன் எனும் 27 வயதுடைய இளைஞரே உயிரிழந்தவராவார்.

அவரது கால் பாதத்தில் பாம்பு தீண்டிய அடையாளம் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## மீன்பிடிக்கச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஷகாணப்பட்டுள்ளார். மேற்படி நபர் இன்று புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில் மீன்பிடிக்கச் சென்றிருந்தார் என்று தெரியவந்துள்ளது.

மேலும், அந்த நபர் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், சம்பவம் தொடர்பில் மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கல்முனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இன்று விசாரணை நடைபெற்றது.

வழக்கில் இடையீட்டு மனுதாரர்களாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஏ. கலீலுர் ரஹ்மான் இருந்தனர்.

அவர்களது பிரதிநிதிகளான ஜனாதிபதி சட்டத்தரணிகள் சஞ்சீவ ஜெயவர்த்தன மற்றும் பைஸர் முஸ்தபா தலைமையிலான குழு மற்றும் தவராசா கலையரசன் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழு நீதிமன்றில் ஆஜராகினர்.

இரு தரப்பும் தங்களது வாதங்களை முன்வைத்திருந்தபோதும் மேலதிக வாதங்கள் மற்றும் சமர்ப்பிப்புகளுக்காக வழக்கு அடுத்த ஆண்டு ஜனவரி 28ஆம் திகதிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

இன்றைய விசாரணையின் போது பிரதிவாதர்கள் ஹரீஸ் மற்றும் கலீலுர் ரஹ்மான் பிரசன்னமாகியிருந்தனர்.

## லலித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எவ்வாறாயினும், தற்போதுள்ள பாதுகாப்பு காரணங்களுக்காகத் தமது சேவைப் பெறுநர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்குப் பதிலாக கொழும்பு நீதிமன்றம் ஒன்றில் சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி இன்று நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

இதன்போது, மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம், இந்தக் கோரிக்கையை இன்றில் இருந்து ஒரு வாரத்துக்குள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துப் பொருத்தமான உத்தரவுகளைப் பெற நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வாவுக்கு அறிவித்தது.

மனுதாரர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி நுவான் போபகேவும் அந்தக் கோரிக்கைக்கு தமது இணக்கத்தைத் தெரிவித்தார்.

அதன்படி, மேன்முறையீட்டு மனுவின் விசாரணையை முடிவுறுத்துவதற்கு நீதியரசர்கள் ஆயம் முடிவு செய்தது.

2011 டிசம்பர் 9 ஆம் திகதி லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக அவர்களது உறவினர்களால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவொன்று தாக்கல் செய்யயப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பாக சாட்சியமளிக்க நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் பாதுகாப்புச் செயலாளராகப் பதவி வகித்திருந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 2019 ஆம் ஆண்டு அறிவித்தல் அனுப்பப்பட்டது.

எனினும், பாதுகாப்புக் காரணங்களுக்காகச் சாட்சியமளிக்க யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்குச் செல்ல முடியாது எனக் கூறி, குறித்த அறிவித்தல் அனுப்பும் முடிவுக்கு எதிராக கோட்டாபய ராஜபக்ஷ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கக் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட அறிவித்தலை இரத்துச் செய்தது.

இந்தநிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் குறித்த தீர்ப்பை இரத்துச் செய்யக் கோரி, காணாமல் போனவர்களின் உறவினர்கள், உயர்நீதிமன்றத்தில் இந்த மேன்முறையீட்டைத் தாக்கல் செய்தன

# ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் தலைவர் உட்பட 11 பேர் கைது!

கொழும்பு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் உட்பட 11 சந்தேக நபர்கள் சிலாபம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம், பங்கதெனியா, வீரகமண்டலுவ பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று (29) மாலை நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் தலைவர் குறித்த பகுதியில் உள்ள வீட்டில் இருந்து தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் முச்சக்கர வண்டியில் சிலாபம் பேருந்து நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, சிலாபம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் மூன்று பெண்கள் மற்றும் எட்டு ஆண்கள் அடங்குவர்.

இந்த விடயம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சிலாபம் தலைமையகப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்காலத்தில் கடுமையாக்கப்படவுள்ள சட்டம்!

ஆசன பட்டி சட்டத்தை எதிர்காலத்தில் கடுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். காலி மாவட்ட போக்குவரத்துக் குழுவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், நாட்டில் ஆண்டுக்கு 2350 பேர் இறக்கின்றனர்.

மேலும் 6,000 பேர் படுகாயமடைகின்றனர். இதனாலேயே போக்குவரத்து அமைச்சு மூலம் 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளுக்கான வீதி பாதுகாப்பு திட்டத்தை நாங்கள் முன்வைத்துள்ளோம். அதன் கீழ் ஆசன பட்டித் திட்டத்தை அமுல்படுத்தினோம். எப்படியிருந்தாலும், நாங்கள் வர்த்தமானியை வெளியிடுவோம். 2011 முதல் இது ஏற்கனவே அமுலில் உள்ளது.

யாரும் இதனை மதிப்பதில்லை. ஆசன பட்டி அணியாமல் நெடுஞ்சாலையிலும் பயணிக்கின்றனர். பெரும்பாலான பேருந்துகளில் ஆசன பட்டி உள்ளது. எனவே, நாங்கள் நிச்சயமாக சட்டத்தை அமுல்படுத்துவோம், அதனை மதிக்காத பேருந்துகளின் உரிமங்களை இரத்து செய்வோம் என்று தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ரயில்வே திணைக்களத்தின் நெருக்கடிகளுக்கு அதன் பிரதானிகளே பொறுப்புக் கூறவேண்டும் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவத் தளபதியின் பதவிக் காலம் ஒரு வருடத்துக்கு ஜனாதிபதியால் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 30

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த றொட்ரிகோவின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் ஒரு வருட சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தப் பதவி நீடிப்பு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் வழங்கப்பட்டுள்ளது.

# மழலை மனங்கவர்!....

பத்து டோக்கன் சேர்ந்தவுடன் அவனுக்கு பிடித்த உபயோகமான பரிசை தரலாம். 20 டோக்கன் சேர்ந்த உடன் அதிக் செலவில்லாத ஒரு அரைநாள் சுற்றுலா செல்லலாம்.

ஒரு சில அணுகுமுறைகள் மட்டும் உதாரணமாக கொடுத்து இருக்கிறேன். அந்தந்த பெற்றோருக்கும் குழந்தைக்கும் இருக்கும் கெமிஸ்ட்ரிக்கு தகுந்தபடி நீங்கள் திட்டங்களை தீட்டிக் கொள்ளலாம்.

குழந்தையை அவனது கண்ணோட்டத்தில் கையாள வேண்டும். அடம்பிடித்தால் அவன் எதிரி இல்லை. குழந்தைக்கு எந்தவிதமான தண்டனையும் தரக்கூடாது, அடிப்பது, கிள்ளுவது, தலையில் குட்டுவது, கண்களை உருட்டி கோபத்தை காட்டுவது, ரூமில் வைத்து பூட்டுவது, நான் பேச மாட்டேன் என்று மிரட்டுவது போன்றவை கூடாது. இது குழந்தையை மனதளவில் பாதிக்கும்.

சொல்லிக்கொடுத்த ஒழுக்கத்தை ஒவ்வொரு முறை சரியாக செய்யும் போது அது சிறு செயலாக இருந்தாலும் (உ-ம் தரையில் கிடக்கும் விளையாட்டுப் பொருட்களை ஒழுங்குபடுத்துவது) மனதார பாராட்ட வேண்டும். கைகளைத் தட்டி, குழந்தையை அணைத்து, தலையைத் தடவி நமது அருகாமையில் உணர்த்த வேண்டும்.

ஒரு ஒழுக்கத்தை சரியாக கடைபிடிக்காவிட்டால் என்னென்ன பின் விளைவுகள் என்று புரிய வைக்க வேண்டும். (உ-ம்) சிதறிக் கிடக்கும் கலர் பென்சில்களில் முக்கியமான பச்சை, சிவப்பு போன்றவற்றை காணவில்லையானால், 'நீ எப்படி உனக்கு பிடித்த பூ வரைய முடியும்?' என்று சொல்லி புரிய வைக்க வேண்டும்.

ஒழுங்கு நடைமுறையை ஒரே விதத்தில் அறிவுறுத்த வேண்டும். ஒரு நாள் சாப்பிடும் போது செல்போன் கூடாது என்பது மறுநாள் செல் வைத்திருந்தால் அதை கவனிக்காமல் விட்டு விடுவது என்று மாறி மாறி செய்யக்கூடாது.

சின்ன பிடிவாதங்களை கண்டு கொள்ளாமல் விட்டு விடலாம். அடம் பிடிக்கும் குழந்தையின் எனர்ஜியையும், மனதையும் வேறு ஒரு உடல் சார்ந்த (நடனம், படம் வரைதல் போன்றவை) அல்லது உணர்வுகளை அழகாக வெளிப்படுத்தும் செயலில் ஈடுபடுத்தலாம்.

அடம் பிடிக்கும் குழந்தையுடன் நாம் மல்லு கட்டக் கூடாது. இது பவர் போட்டியல்ல.

இதை ஒரு 10உ என்று சுருக்கமாகக் கூறிவிடுகிறேன். ஒவ்வொரு 'ஊ' க்கும் நீங்கள் விரிவான விளக்கத்தையும், செயல்திட்டங்களையும் யோசியுங்கள். ஏனென்றால் ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது!

### அடம் பிடிக்கும் குழந்தையை சமாளிக்க பெற்றோர்கள் செய்ய வேண்டியவை

**Calm** – மிகவும் அமைதியாக நிதானமாக நடந்து கொள்வது

**Consistency**– ஒரே விதமான, திடமான அணுகுமுறை

**Clear Boundaries** – குழந்தையின் நடவடிக்கைகளுக்கு ஒரு எல்லை வகுத்துக் கொள்வது

**Choices** – மாற்றி யோசி!! (உதாரணம்: சாக்லேட்டுக்கு பதில் அப்பிள்)

**Consequences** – ஒழுங்காக நடந்து கொள்ளாவிட்டால் அதனால் ஏற்படும் பின் விளைவுகளை புரிய வைத்தல்

**Consider** – ஏன் அடம் பிடிக்கிறான் என்று அவனது கண்ணோட்டத்தில் பார்ப்பது.

**Compassion** – குழந்தையை பரிவுடன் அணுகுங்கள். (உ-ம்) ஓடாதே என்று அதட்டுவதை விட மெதுவா போடா கண்ணா என்று சொல்வது.

**Counselling** – நிறைய பேசுங்கள், பேச விடுங்கள்

**Comfort** – அவனுக்கு அரவணைப்பாக இருந்து கொண்டு புரிய வையுங்கள்

**Celebrate** – கொண்டாடுங்கள், நல்ல நடத்தையை உடனடியாக பாராட்டுங்கள்.

பெற்றோர்களும் அடம்பிடிக்காமல், வீட்டில் உள்ளவர்களும் அடம்பிடிக்காமல், கோபப்படாமல் இருந்து, குழந்தைக்கு நல்ல முன் உதாரணமாக இருக்கலாமல்லவா!







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.07.2025 வெளியிடப்பெற்றது.